# அறவழி
NONVIOLENCE


### அறமொழி

என்னுடைய நண்பர்கள் என்னை உண்மையாகவே பெருமைப்படுத்த வேண்டுமென்று நினைப்பார்களேயானால் என்னுடைய திட்டங்களைத் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் நிறைவேற்றிக்காட்டட்டும். அவற்றில் நம்பிக்கையில்லையானால் என்னை முழு மூச்சுடன் எதிர்க்கட்டும். —காந்தியடிகள்.


அறம் 2 ❋ மாத இதழ் ❋ 1987 புரட்டாதி ❋ பக்கம் 6 ❋ விலை ரூபா 2-00 ❋ வழி 16


# 'கல்வி அறிவற்ற மக்களுக்கு அறிவூட்டல் நம் கடமை'

**"தென் கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் தமிழர் கல்வியில் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றபோதிலும்கூட, நம்மவர்கள் மத்தியில் குறிப்பிட்ட ஒரு பகுதியினர் கல்வி அறிவற்றவர்களாக இருந்துவருவது கவலை தருகின்றதாகவுள்ளது. இவ்வாறு கல்வி அறிவற்று இருக்கின்ற மக்களின் கல்வித்தரத்தை உயர்வடையச் செய்ய எம்மத்தியில் பணிசெய்கின்ற அரசுசார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் முன்வரல் வேண்டும்".**

இவ்வாறு சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா இம்மாதம் 8ம் திகதி கைதடி நுணுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்பட்ட கல்வியூட்டல் தினக் கருத்தரங்கில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், பாடசாலை மாணவர்கள், சென் ஜோன்ஸ் முதலுதவித் தொண்டர்கள், மற்றும் கிராமிய மக்களும் பங்கு கொண்டனர்,

இக்கருத்தரங்கில்மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த சமாதான இயக்கத் தொண்டர்களும் விசேட கருத்துரைகள் ஆற்றினர்.

பண்டிதர் செ. சிவலிங்கம் அங்கு உரையாற்றுகையில் "நம் சமுதாயத்தில்இருக்கும் மடமையை போகிக் கல்வியில் புரட்சி ஏற்படுதல் வேண்டும்" என்றார்.

கல்வித்திணைக்களத்தின் முதியோர் கல்வி அதிகாரி திரு. சீ. எஸ். சுப்பிரமணியம் கருத்துரையாற்றுகையில் "யாழ் மாவட்டத்தில் எழுத— வாசிக்கத் தெரியாத மக்களுக்கு கல்வி அறிவு ஊட்டி அவர்களின் முன்னேற்றத்துக்கு உதவ வேண்டியது நமது கடமையாகும்" என்றார்.

அதிபர் திரு. க. இளைய தம்பி கருத்து வழங்குகையில், அறியாமை, மடமை, வறுமை காரணமாக பாடசாலைகளுக்குச் செல்லாமல் பஸ்நிலையங்களில் கடலை, பீடா, பத்திரிகைகள் விற்பவர்களின் குடும்பநிலைகளை ஆராய்ந்து அவர்களின் வாழ்க்கைக்கு வேண்டிய கல்வி அறிவை ஊட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல்வேண்டும்என்றார்".

மற்றும்திரு.சண். காளிதாஸ், திரு. பிரியங்கா பெரேரா ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

திரு. எஸ். சீ. எஸ். தங்கராசா நன்றியுரை கூறினர்

## அறவழி வாசகர்களே!

அன்பார்ந்த வணக்கமும் - ஆசியும்! புதிய அமைப்பில் புதிய அம்சங்களுடன் இம்மாதம் முதல் வெளியிடப்படுகின்ற **அறவழி** பத்திரிகையை தங்களின் அன்புக் கரங்களில் தவழ விட்டுள்ளோம். இப்பத்திரிகையின் இப்போதைய அமைப்பு பற்றி நீங்கள் நிச்சயம் மனம் மகிழ்வீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

எமது பத்திரிகையின் ஆச்கபூர்வமான வளர்ச்சியில் எமக்கு அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற பெருமைக்குரிய வாசகர்களின் கருத்துக்களுக்கும் ஆலோசனைகளுக்கும் நாம் மதிப்பளித்து வருகின்றோம்.

தமிழ் சமுதாயத்தின் மத்தியில் - பல்வேறு நெருக்கடிகளுக்குமிடையில், **அறவழி** என்ற பெயரில் பத்திரிகை வெளியிடுவது என்பது மிகவும் கஷ்டமிக்க ஒரு முயற்சியாக இருத்தயோதிலும்கூட, நாம் எமது புனித பணியில் தொடர்ந்து ஈடுபட ஏமக்கு உறுதுணையாக இருந்துவருகின்ற எமது பெருமதிப்புள்ள வாசகர்களை எம் நெஞ்சகத்தில் நிறுத்திப் போற்றுகின்றோம்; வளரட்டும் தங்களின் பேராதரவு.

தமிழ் மண்ணில் வெளியிடப்படுகின்ற ஒரேயொரு **அறவழி** பத்திரிகையாக எமது பத்திரிகை திகழ்ந்து வருகின்றதென்பது நாம் சொல்லி நீங்கள் அறியவேண்டுமென்பதில்லை.

எனவே, கடந்த காலங்களில் தாங்கள் எமக்கு அளித்து வருகின்ற அன்பையும், ஆதரவையும், தொடர்ந்தும் எமக்கு விசுவாச உணர்வுடன் வழங்கி பத்திரிகையின் முன்னேற்றத்துக்கு உதவுவீர்கள் என நம்புகிறோம்.

இப் புதிய வடிவமைப்பு அம்சங்கள் பற்றிய தங்களின் கருத்துக்களைத் தயவுசெய்து எழுதுங்கள்.

— ஆசிரியர்.

## அறவழி சிறுவர் கழகப் பணிகளுக்கு வெளிநாட்டவர் பாராட்டு!

"அறவழிப் போராட்டக்குழுவினால் சிறுவர்ளின் நலன்கருதி அமைக்கப்பட்டிருக்கும் "அறவழி சிறுவர் கழகங்களின் பணிகள் பாராட்டத்தக்கவை எனவும், இவ்வாறான அமைப்பு பற்றித் தாம் வேறு எங்குமே அறியவில்லை" என்றும் அண்மையில் வடபுலத்துக்குவிஜயம் செய்த இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனிபோன்ற நாடுகளைச் சேர்ந்த சர்வதேச சமாதான சேவை இயக்கப்பிரதிநிதிகளான திரு, காஸ்ரன், செல்விகள் டோறிஸ், யோய் போன்றவர்கள் "அறவழி" யிடம் தெரிவித்தனர்.

நுணுவில் மேற்கு அறவழி சிறுவர்கழகத்தினால் இம்மாதம் 7ம் திகதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் பங்கு கொண்டு கருத்துத்தெரிவிக்கும்போது இவ்வெளிநாட்டவர் இவ்வாறு கூறினர்.

சிறுவர் கழகத்தின்தலைவர் செல்வன் துரைராஜா கலானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது அறவழி சிறுவர் கழக உறுப்பினர்கள், பாலர் பாடசாலைச் சிறார்கள். மற்றும் பல பெண்களும் பங்குகொண்டிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் முழுநேர ஊழியரான திரு. சண் காளிதாஸ், தமது அண்மைக்கால இந்தியப் பிரயாண அனுபவம்பற்றி உரைநிகழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### வடமராட்சியில் புனர்வாழ்வுப் பணி

இராணுவ நடவடிக்கை காரணமாக வடமராட்சியில் தாய்—தந்தையர்களை இழந்த பிள்ளைகள்—கணவனை இழந்த மனைவியர்—குடும்பப் பிரதான உழைப்பாளர்களை இழந்த குடும்பங்களுக்கு அறவழிப் போராட்டக்குழு புனர்வாழ்வு உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடுகளைச்செய்துவருகின்றது.

## உலகம்

### இத்தாலியில் தமிழ்மணம் பரப்பி வரும் தமிழ் மாதாந்த சஞ்சிகை


உலகம் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு இலங்கையில் இருந்து கதை, கட்டுரை கவிதை, விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆர்வமுள்ளோர் எழுதவும். பிரசுரிக்கப்படும் தகுதியான ஆக்கங்களுக்கு உலகம் பிரசுரகர்த்தாக்கள் சன்மானம் அளித்து ஊக்குவிப்பார்கள். தொடர்பு கொள்க:

"ULAKAM"
c/o Parroccbia S. Maria alla Fontana
Piazza S. Maria alla Fontana-7
20159 Milano - Italy
Tel. (02) 6887059.


சுதந்திரத்தோடு இணைந்தது கட்டுப்பாடும் பணிவும்

# அறநோக்கில்

## நம்வாழ்வு நம்கையில்

மனித வாழ்க்கை என்பது விதைபோலாகும். அது செடியாகி, பூவாகி, பிஞ்சாகி பழுப்பதுபோல தானே ஏற்படுவதாகும். நாம் விதைக்குத் தண்ணீரும், மண்ணும் இடலாம். விதையில் இருந்து வரும் செடியை சூரிய வெளிச்சமுள்ள இடத்தில் வைக்கலாமே, தவிர வேறு எதுவும் செய்யமுடியாது. மற்றும்படி எல்லாச் செயல்களும் விதையில் இருந்து வரவேண்டியவைகளே.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கையைத் திருத்திக் கொள்ள தாங்களே கவனமாயிருந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமேதவிர பிறர் எதுவும்செய்யமுடியாது.

நம்முடைய வாழ்வை நாம் பிறரிடம் ஒப்படைத்துவிட்டு, வாளா இருத்தல் கூடாது. நம்முடைய வாழ்வு நம் கையில்தான் உண்டென்பதை நம்மில் பெரும்பாலோர் உணராமல் இருந்துவருவது தெரிகின்றது.

இப்படியான மனிதர்களால் யாருக்கு என்ன லாபம்?

நாம் ஏன் வாழ்கிறோம்? எப்படி வாழவேண்டும்? என்ற சுயசிந்தனை செய்தாலன்றி நமக்கு வாழ்க்கையைப்பற்றிய சுயசிந்தனையும், சுயதெளிவும் ஏற்படமாட்டாது..

நம் வாழ்வானது நம் கையில் இல்லை என்ற எண்ணங்கொண்டு நம்மில் பலர் இருப்பதனால் சமுதாயத்தில் பல்வேறு பிரச்சனைகள் எழுகின்றன. தனிமனித மட்டத்தில் இவ்விதம் காணப்படுகின்ற எண்ணப்போக்கு நம் சமுதாயத்தைப் பெருமளவு பாதித்துவருகின்றது.

தனிமனிதனில் காணப்படுகின்ற நல்ல எண்ணங்கள், நம்பிக்கைகள், தெளிவுகள் தொலைநோக்குப் பார்வைகள் போன்றவை நம் சமுதாயத்தினை நல்வழியில் இட்டுச்செல்லவும் — வழி நடத்தவும் உதவும் என்பதில் கருத்துவித்தியாசம் இருக்கமுடியாது.

மனிதன் பலவீனமானவன்! குறைகள் கொண்டவன்! உலகில் பலவீனமற்ற மனிதர்களை எங்குமே காணமுடியாது. அதேபோன்றுதான் குறைகள் அற்றவர்களையும் காணமுடியாது.

நாம் நம்மிடம் இருக்கும் குறைகளைப்பற்றியும், பலவீனங்கள்பற்றியும் நன்கு உணராமல் —மற்றவர்கள் மத்தியில் காணப்படுகின்ற குறைகளைப்பெரிதுபடுத்துவதிலும்—விமர்சிப்பதிலும், வல்லவர்கள்போல காட்டிக்கொள்ள முயல்கின்றோம்.

இவை நம் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு எவ்விதம் உதவும் என்பதுபற்றிச் சிந்திக்கவேண்டும்.

நம் சமுதாயத்தில் இருக்கும் பெரும்பாலான மனிதர்களைப் பார்ப்போமாகில், அவர்கள் மத்தியில் நிலவிக்கொண்டிருக்கின்ற காரிருள் எண்ணங்கள் சிந்தனைகள், நம்பிக்கையின்மைகள், தெளிவின்மைகள், எதிர்ப்பத நினைப்புக்கள் கூட்டு மொத்தமாக சமுதாயத்தினைச் சீரழிக்கச் செய்வதுடன், நம் எதிர்கால சந்ததியினரையும் பாதிக்க ஏதுவாகின்றன என்பது தெளிவாகத் தெரிவதுடன், வாழ்க்கை அனுபவம் காட்டும் பேருண்மையுமாகும்.

இவை காரணமாக நாமோ வாழ்க்கையின் நாணயக்கயிறானது நம் கையில் இருப்பதை உணராது. அறியாது அது மற்றவர்களிடம்தான் இருக்கின்றது, அவர்களால்தான் முடியக்கூடும் என்ற நினைப்புக்கொண்டு வாழமுற்படுகின்றோம்.

இவ்வாறானவற்றினை நாம் நம் வாழ்க்கையில் தவிர்த்துக்கொண்டு நம் தனிப்பட்ட பொதுவாழ்க்கையினை நன்கு திட்டமிட்டு, நம்பிக்கையுடன் முன்னெடுத்துச்சென்று நமக்கும் — நாம் வாழ்கின்ற சமுதாயத்திற்கும் உதவுதல் இன்றைய காலகட்டத்தில் அத்தியாவசியமானதாகும்.

நம் கையில் இருக்கும் நம் வாழ்வை சிறப்புறச் செய்வதற்கு நாம் நம்மிடத்தில் நல்ல பண்புகளை. நல்லெண்ணங்களை நல்ல சிந்தனைகளை வளர்த்துக்கொண்டு விசுவாசமிக்க நம்பிக்கையுடன் வாழவேண்டும்.

நாம் நமக்கென்று ஒரு வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டால்தான் நம் வாழ்வு சிறப்படையும், வெற்றிவாகை சூடும், சாதனைமிக்கதோர் வாழ்வாக அமையும்.

இவைகளையெல்லாம் மறந்து நம் வாழ்வானது நம் கையில் இல்லை என்ற நினைப்பினை வளர்த்துக்கொண்டு, எதற்கெடுத்தாலும் மற்றவர்களில் தங்கி இருக்க விரும்பும் மனோபாவம் எம் முன்னேற்றத்திற்கு உதவமாட்டாது.

எனவே, நம்வாழ்வு நம் கையில்தான் என்ற பெருநினைவுடன் நம் வாழ்வை முன்னெடுத்துச் செல்வோம்! பணிசெய்வோம்!

# மக்கள் ஆட்டுமந்தைகள் போல் அல்லாமல் உண்மையைப் பேச முன்வரல் வேண்டும்

— சிறை மீண்ட பிதா சிங்கராயர்

''மக்களின் எண்ணங்களில் தான் உண்மையான தலைமைத்துவம் உருவாக வேண்டும். மக்கள் ஆட்டு மந்தைகள் போல் அல்லாமல் உண்மையைப் பேச முன்வரல் வேண்டும். இன்று அதைத்தான் மக்கள் செய்ய வேண்டும்''

இவ்வாறு சிறை மீண்ட வண. பிதா ஆபரணம் சிங்கராயர் குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்த உற்சவ ஆரம்பத்தின் வைபவத்தில் முதல் தடவையாக மறைஉரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

வண. பிதா சிங்கராயர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''சிறை மீண்ட பின்பு நான் பங்கு கொள்ளும் முதல் சமய நிகழ்ச்சி இது. இது முதல் மறை உரை. கொழும்பு புறக்கோட்டைக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து நாம் வைக்கப்பட்டிருந்த சிறையில் 2000 குற்றவியல் கைதிகள் புதிய அலவாங்கு, பிக்கான், மண்வெட்டி சகிதம் நாம் இருந்த அறைச் சுவரைத் துவாரம் இட்டனர். அங்கு 210 தமிழ் கைதிகள் இருந்தோம்''

''சிறை உடைபட்டுக் கொண்டிருக்கையில் நான் இறைவனிடம், 'யேசுவைப் போல் இறக்கக்கூடிய தெம்பையும்-தியாகத்தையும் தாரும்'' என்று மன்றாடினேன். தெய்வாதீனமாக அந்த ஆறுவது சிறை உடைப்புக் காப்பாற்றப்பட்டது.''

அவர் மேலும் அங்கு உரை நிகழ்த்துகையில்

''உண்மையைக் கூறுவதற்கு மக்கள் பயப்படக் கூடாது. யேசுநாதர் தன் சீடர்களிடம் ஒரு முறை மக்கள் யாராவது மனுமகனைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று கேட்டார்கள், அதே போல் நாட்டுக்குத் தலைமை தாங்க வரும் தலைவர்கள் மக்கள் தங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை முதலில் அறிய வேண்டும்'' என்றார்.

# வெளிநாடுகளில் இருக்கும் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள்?

இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்ட இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கையை அடுத்து வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர் மத்தியில் பெரும் பீதியும் -அச்சமும் உருவாகியுள்ளது.

இலங்கையில் சமாதான உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக நாட்டில், மிக விசேடமாக வடக்கு -கிழக்கு மாநிலங்களில் நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது என்ற நினைப்பில், வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்களை உடனடியாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பலாம் என சில நாடுகள் கருதின. ஆயினும், லண்டன் சுவீஸ், நோர்வே, மேற்கு ஜேர்மனி, டென்மார்க் போன்ற தேசங்களில் இயங்குகின்ற தமிழர் அமைப்புகளும், மனித உரிமைகள்இயக்கங்களும் மேற்கொண்ட முயற்சிகளை அடுத்து, வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கைத் தமிழர்களை உடனடியாகத் திருப்பி அனுப்பும் முயற்சியினை குறித்த நாடுகள் சில மாதங்களுக்குப் பின்போட்டுள்ளன என நம்பகமாகத் தெரிய வருகின்றது.

இலங்கை இந்திய உடன்படிக்கையில் காட்டப்பட்டிருக்கும் விடயங்கள் எவ்விதம் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன என்பதை அவதானித்த பின்னரே இவ்வாறான தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என அறியப்படுகின்றது.

# சுவிஸில் அறவழி கிளை

சுவிர்சலாந்திலிருக்கும் லவுகான் கந்தோனில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அறவழிப் போராட்டக் குழுவின் கிளை ஒன்றினை 5.7.87ல் அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளனர்.

இக்கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் லவுகானில் உள்ள செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. வீ. பாஸ்கரலிங்கம், உபதலைவர்: திரு. எஸ். பத்மநாதன். செயலாளர்: திரு. பொ. கந்தையா. உபசெயலாளர்: திரு சிவனேசன், பொருளாளர்: திரு. எஸ். கந்தசாமி, நிர்வாக உறுப்பினர் திரு. ராஜஸ், திரு. யோகன்.

## உலக நாடுகளில் அகதி

| நாடு | அகதிகள் தொகை |
|---|---|
| ஆப்கானிஸ்தான் | 3,485.800 |
| பலஸ்தீனம் | 2,043.500 |
| எதியோப்பியா | 1,286.500 |
| அங்கோலா | 358.000 |
| கம்போடியா | 283.800 |
| எல்சய்ல்டோர் | 251.700 |
| மொசம்பிக் | 219.100 |
| ருவாண்டா | 187.100 |
| சாட் | 176.300 |
| மேற்கு சகாரா | 165.000 |
| புருண்டி | 163.500 |
| ஈரான் | 121.200 |
| லாவோஸ் | 95,305 |
| பிலிப்பைன்ஸ் | 90,000 |

## வாசகர் கவனத்துக்கு!

1986ம் ஆண்டு மே முதல் வெளியிடப்பட்டுவருகின்ற **அறவழி** பத்திரிகையின் அமைப்பில் இம்மாதம் முதல் நல்லதொரு கவர்ச்சி மிக்க மாற்றத்தினை வாசகர் நன்மை கருதி ஏற்படுத்தியுள்ளோம்.

இப்புதிய அமைப்பு தங்களை நிச்சயம் கவரும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு. எமது பத்திரிகையின் வளர்ச்சியில் தாங்கள் காட்டி வருகின்ற பேராதரவைத் தொடர்ந்தும் எமக்கு அளித்து எம்பணிக்கு ஊக்கம் கொடுப்பீர்கள் என நம்புகிறோம்.

ஆ—ர்.

# —அறவழித் தத்துவம்—

## அரசியல் அதிகாரத்தைப் புரிந்துகொள்ளுதல்

பிரச்சனைகளுக்குத் தீர்வு காண அறவழிப் போராட்டம் பொருத்தமானது என்பது கல்விமான்களின் முடிவாகும். வளர்ச்சியடைந்துவரும் இக்கலையின் கல்விமான்கள் பிரஜைகள் யாவரும் ஈடுபடுதலும், கவனம் கொள்ளுதலும் வேண்டும். கல்விமான்களின் ஆய்வுகளும், விமர்சனங்களும் இத்துறையின் வளர்ச்சிக்குத் துணைசெய்யும். அணு ஆயுத பேரழிவினை உலகம் எதிர்கொண்டிருக்கும் அபாயநிலை கல்விமான்களின் கவனத்தை ஈர்ந்துள்ளது. உலகில் மனச்சோர்வும், மரண பயங்கரமும் ஏற்படுத்தும் இவ் அணு ஆயுதத் திட்டங்கள் மாபெரும் பிரச்சனையாகும். அறவழிப் போரராட்ட ஆய்வுகள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உண்மையான மாற்று வழி அணுகுமுறைகளைக் காணமுடியும் என்று நம்பிக்கையூட்டுகின்றன. புதிய அறவழிக்கொள்கைகளின் அவசியத்தைக் கல்விமான்கள் வலியுறுத்துகின்றனர். அரசியல் விஞ்ஞானிகள், சமூக விஞ்ஞான விற்பன்னர்கள் என்போர் அறவழிப் போராட்டக் கல்வியில் ஈடுபட்டு ''அரசியல் அதிகாரத்தைப்'' புதிய ஒளியில் காணவேண்டும் என்று அறவழிக் கல்விமான்கள் கோருகின்றனர்.

நாடுகளின் தேசியப் பாதுகாப்புக்கொள்கைகளில் அறவழி அணுகுமுறைகளைக் கையாளுதல் வேண்டும். அதற்கு அறவழிக் கல்வியின்மூலம் அரசியல் அதிகாரத்தைப் புதிய கோணத்தில் ஆய்ந்திடவேண்டும். பாரம்பரியமாக ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பின் அடிப்படையில்தான் அரசியல் அதிகாரம் என்னும் விடயத்தின் தன்மை அடங்கியுள்ளது. அறவழிப் போராட்டக் கல்வியின்மூலம் அரசியல் அதிகாரத்திற்குப் புதிய இலக்கணம் வகுக்கமுடியுமா?

அரசியல் அதிகாரத்தைப் மட்டும் மையமாகக்கொண்டே தற்போதைய அரசியல் விஞ்ஞானத்துறையின் அமைப்பும், வளர்ச்சியும், ஒழுங்கமைப்பும் உள்ளது. அரசியல் விஞ்ஞானிகளுக்கு அறவழிப்போராட்ட நெறிகளில் நாட்டமில்லை. அவர்களுக்கு அறவழி நெறி தொடர்பான அறியாமை தெளிவானது.

அறவழிப்போராட்டக்கல்வி ஆய்வு என்றால் என்ன? இதுதொடர்பாக அறிஞர்களிடத்தில் பிரதானமான வேறுபாடுகளின் மத்தியில் அடிப்படையில் ஒருமித்த கருத்தும் அதிகரித்துவருகிறது. அரசியல் அதிகாரம் என்னும் நமது விருட்சத்தை வழக்கமான கண்ணோட்டத்தை விட்டு அதன் வேர்கள் எவ்வாறு ஆழமாகச் சமுதாயத்தில் வேரூன்றியுள்ளது என்று புதிய ஒளியில் உற்றுநோக்குதல் வேண்டும். அரசியல் அதிகாரத்தை இரண்டு வழிகளில் பிறப்பிக்கலாம். ஒன்று வன்முறைமூலம். இரண்டு அறவழிமூலம். அரசியல் அதிகாரத்தின் வலிமை அல்லது சக்தி மக்கள் வன்முறைக்குப் அடிபணிகிறார்களா? இல்லையா? என்பதில் அல்லது அறவழிக்குப் பணிந்து இசைந்து விடுகிறார்களா என்பதில் தங்கியுள்ளது.

அரசியல் அதிகாரம் பிறக்கும்வழியையைவிட அதன்வலிமை அல்லது சக்தி எதில் தங்கியுள்ளது என்பதே பிரதானமானது ஆகும்.

எனவே சமூக அரசியல் அமைப்புக்களுக்கிடையிலும், அரசியல் தலைவர்கள் உருவாக்கும் பின்தரக்கூடிய ஒத்துழைப்பு அல்லது எதிர்ப்பு என்பவற்றிற்கான தொடர்பினை ஆராய்வதே அறவழிப் போராட்டக் கல்வி ஆய்வு ஆகும், சுருங்கக்கூறினால் அரசியல் அதிகாரம் என்றால் என்ன என்பது தொடர்பாக அதிகாரத்தில் உள்ளவர்களினதும், பொதுமக்களினதும் கருத்துக்களை ஆராய்வதே இந்த ஆய்வு ஆகும். மேலோட்டமாகவன்றி மிக ஆழமாக சமுதாயத்தில் அரசியல் அதிகாரத்தினை பிழிவை ஆராய்ந்து சகல அதிகாரங்களினதும் ஊற்றிடம் யாது என்று காணுதல் வேண்டும்.

வன்முறையை விடுத்து அறவழிமூலம் நாட்டின் தேசியப் பாதுகாப்பினை வலுப்படுத்தக்கூடிய அரசியல் அதிகாரத்தை எவ்வாறு நிலைநாட்டலாம் என்று ஆராய்தலும் இதில் பிரதான அம்சமாகும்.

எனவே தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் தோன்றிய வேளைகளில் கையாளப்பட்ட வன்முறை பலாத்கார நடவடிக்கைகள், அதன் பலாபலன் என்பவற்றை நாம் மதிப்பீடு செய்தல் அறவழிக் கல்வியில் ஓர் அவசியமான அம்சமாகும். அறவழி நடவடிக்கைகள்மூலம் விளைந்த பலாபலன்களையும் வன்முறையின் பலாபலன்களுடன் ஒப்புநோக்குதல் அவசியமாகும்,

அரசியல் வன்முறை இராணுவ நடவடிக்கை என்பவற்றின்போது பிரயோகிக்கப்படும் அழுத்தம் அல்லது நிர்ப்பந்தம் என்னும் பதப்பிரயோகத்தினால் உண்டாகும் குழப்பத்தினைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். அறவழி அழுத்தம் வேறு, வன்முறை அழுத்தம் வேறு. இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல்வேண்டும். இராணுவப் பலமே இறுதிப்பலம், அதிகாரம் என்ற கருத்தைப் பல ஆய்வாளர்கள் ஏற்றுக்கொள்வதில்லையா? ஆனால் அழுத்தம் நிர்ப்பந்தம் என்றால் அது இராணுவ நடவடிக்கையேதான என்று அதே ஆய்வாளர்கள் அர்த்தம் கொண்டு குழப்புவதையும் காணலாம். அழுத்தம் என்பது இராணுவ நடவடிக்கையின் ஏகபோகமான வழிமுறை என்பதை அறவழிப் போராட்ட ஆய்வுகள் மறுதலிக்கின்றன. அறவழியிலுங்கூட அழுத்தமும் நிர்ப்பந்தமும் கலந்த அம்சங்கள் இருக்கமுடியும்.

இது ஜீன் ஷாப், அடம் றோபெட் என்னும் இரு அறவழிப் போராட்ட ஆய்வாளர்களின் கருத்தாகும். அரசியல் அதிகாரம் வன்முறை நிர்ப்பந்தம்மூலம் அல்லது அறவழி நிர்ப்பந்தம்மூலம் நிலைநாட்டப்படலாம். ஆனால் வழி எது என்பதே பிரதானமே தவிர, நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்பட்டதா என்பது பிரதானமல்ல. அரசியல் அதிகாரம் வன்முறை நிர்ப்பந்தங்களால் பிரயோகிக்கப்பட்டதா என்பது பிரதானமல்ல. அரசியல் அதிகாரம் வன்முறை நிர்ப்பந்தங்களால் மட்டுமே நிலைநாட்டப்படுகிறது என்ற கருத்து தவறான வன்முறையின்மூலம் நிலைநாட்டப்படுதல் இடத்துக்கிடம் வேறுபடும் பல்வேறு காரணிகளும் இதனால் விளையும் பயனை நிர்ணயிக்கின்றன.

அறவழிப் போராட்டக்கல்வியின் அரசியல் அதிகாரம் பரந்துபட்ட தெளிவான ஆய்வுகளுக்குள்ளாகிறது. இவ் வதிகாரம் அதிகாரத்தில் உள்ளவர்களால் தெரிந்தும், தெரியாமலும் செய்யப்படும் சௌகரியங்களாலும் பிறப்பிக்கப்படுகின்றது. இந்த அதிகாரத்தின் பலம் மக்களின் மனவலிமையில்தான் முளைவிடுகின்றது.

இயற்கையில் அரசியல் அதிகாரம் வன்முறைத்தன்மையோ அன்றி அறவழித்தன்மையோ கொண்டதல்ல ஆயினும் நடைமுறைச்செயற்பாட்டில் வன்முறைகளும் கொண்டதாகவே கருத இடமளிக்கிறது. அரசியல் அதிகாரம்பற்றிய ஆரம்ப நூல்களில் இராணுவ பலத்தையும் அச்சுறுத்தலையும் ஒட்டியதாகவே விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

பத்துவருடகாலமாக வெளிவந்துள்ள அறவழிப்போராட்ட ஆய்வு நூல்களில் அரசியல் அதிகாரம் தொடர்பான புதிய விளக்கங்கள் உள்ளன. இவற்றை அரசியல் விஞ்ஞான ஆரம்ப நூல் ஆசிரியர்கள் வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறார்கள். ஏன இந்தப் புறக்கணிப்பு? அரசியல் அதிகாரம் என்றால் வன்முறையும் அதனுடன் இணைந்தே செல்லும் என்னும் கருத்துக்கு யாவரும் அடிமையாகிவிட்டார்களா? இதனால் தான் அரசியல் செயற்பாடுகளில் வன்முறை நியதியாகிவிட்டதா?

இதனால்தான் அரசியல் அதிகாரத்துடன், அறவழியும் இசைந்து செல்லமுடியும் என்ற உண்மை திரித்துக்கூறப்படுகிறதா?

வன்முறை அறவழியை விடப் பயனுள்ளது என்பதை ஆராயாமல் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையல்ல.

அரசியல் நடைமுறை, அரசியல்அதிகாரம் இவையிரண்டும் வெவ்வேறு விடயங்களாகும்' ஒன்றை மற்றொன்று என்று எண்ணி மயக்கப் கொள்ளலாகாது. புதிய ஆய்ந்த அறிவுகள் நடைமுறை அரசியலுக்கு முரணானவை என்பதால் புறக்கணிக்கப்படக் கூடாது, புதிய கருத்துக்களைப் புறக்கணிப்பதால் அரசியல் அதிகாரம் தொடர்பான உண்மையான தூய்மையான அர்த்தம் வெளியிடப்படாது.

ஜீன்ஷாப் போன்ற அறவழிப் போராட்டக் கல்வி ஆய்வுத்துறைக் கல்விமான்களின் கருத்துக்களை, அரசியல் விஞ்ஞான நூல் ஆசிரியர்கள் விமர்சிப்பதில்லை. அறவழி போராட்டக் கருத்துக்களை உத்திகளை கருத்திற்கொள்ளாது புறக்கணிப்பதோடு மட்டுமன்றி சரியாகப் புரிந்துகொள்வதுமில்லை. இவற்றை அவர்கள் வேண்டுமென்றே ஏற்கெனவே உள்ள முட்டுக்கட்டைகளுக்கு துணைசெய்து வருகின்றார்கள். ஜீன்ஷாப் அவர்களின் ஆக்கங்களுக்கு இராணுவச்செய்தி நூல்களில் வரும் விமர்சனங்களே உந்துசக்தியாக விளங்குவது மிகவும் வேடிக்கையானது.

நசெற், ஸ்ரார் என்னும் இரு அறிஞர்கள் தமது சர்வதேச உறவுகளில் விஞ்ஞான அணுகுமுறை என்னும் நூலில் அறவழிப் போராட்டம் வெறும் சமாதானம் விரும்பிகளின் போர் எதிர்ப்பாளர்கள் வழி என்று தவறாகக் கூறியுள்ளார். அறவழி ஆவேசம் நிறைந்தது வன்முறைச் சக்தியாக மாறும் சாத்தியம் கொண்டதென்றும் திரித்துக் கூறியுள்ளார். இது எப்படி சமாதானம் விரும்பிகளின் வழியாக முடியும்!

எமது எழுத்தாளர்கள் அறவழிப் போராட்டத்தினை தமது நூல்களில் புறக்கணிப்பதும், திரித்துக்கூறுதலும் சர்வதேச உறவுகள்பற்றிய ஆய்வில் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில் பல நாடுகள் சர்வதேச உறவு முறையில் போராட்டம், முரண்பாடு, ஒத்து இசைந்து செல்லல் என்னும் அம்சங்கள் என்றுமே உண்டு என்பதை யதார்த்தமென எண்ணி ஏற்று அவற்றிற்கு ஈடுகொடுக்க வேண்டி குறுகிய நோக்கில் இராணுவ பலத்தை உலகில் தற்போதைய கொள்கையுடன் ஒட்டிச்செல்வதுதான் யதார்த்த

(4ம் பக்கம் பார்க்க)

**தமிழ் வடிவம்: ஐ. கணேசன்**

---

### தமிழ் சிறுவர் தின இதழ்

மார்கழி மாத அறவழி (இல: 19) தமிழ் சிறுவர் தின இதழாக வெளியிடப் படவுள்ளது. இவ் இதழில் பிரசுரிப்பதற்கு சிறுவருக்கான ஆக்கங்களை எழுதி அனுப்புமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்களின் ஆக்கங்களை புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதவும். தரமுள்ள விடயங்கள் தமிழ் சிறுவர் தின இதழில் பிரசுரிக்கப்படும்.

**ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

ஆசிரியர்,
அறவழி,
த. பெ. இல. 2,
சாவகச்சேரி.

# அறவழித்தத்துவம்....

( 3ம் பக்கத் தொடர்ச்சி )

தமான தேசியகொள்கை என்னும் ஓர் கருத்தைஇது பிரதிபலிக்கின்தது. சர்வதேச அமைப்பு முறையில் உலகில் அப்பட்டமான வன்முறை தவிர வேறெதுவும் இல்லை என்று அடித்துக்கூறுவதற்குச் சான்றுகள் இல்லை. ஆனுலும் வன்முறை அவசியமானதும் யதார்த்தமானதும் என்று கருதப்படுகிறது, சமாதானக் கொள்கைகள் வன்முறைக் கலப்பற்ற நிலைப்பாடுகள் என்பன ஓர் கற்பனு உலகிற்கு மட்டுமே பொருத்தமானவை என்று தள்ளிவைக்கப்பட்டுள்ளன. யதார்த்தமான உலகில் பிரச்சனைகளைக் கையாளும் ஒருவன் நிச்சயமாக வெறும் சமாதான வழிகளை நாடமுடியாது. அறவழிப் போராட்டத்துறை என்பது முற்றிலும் வெறும் சமாதான வழிகளைக் கையாளும் போராட்ட முறையென்று முத்திரை குத்துதலும் தவருனதாகும்.

எனவே அறவழிப் போராட்டம் பொருத்தமற்றது, தொடர்பற்றது, கனவுலகிற்குரியதென்று பறைசாற்றித் திரிவதும் மூறையற்றது. அறவழிப் போராட்டத்துறை எமது சிந்தனையைச் சீராக்குவதை விரைவுபடுத்தும், அரசியல் அதிகாரத்தை புதிய வடிவில் கண்டறிய ஊக்குவிக்கும். இவ் உண்மையைப் பலர் இன்னும் உணரவில்லை. அறவழியென்பது வெறும் சமாதான விரும்பிகளின் கோசமே என்று கற்றுத்தேர்ந்த அறிஞர்களும் கண்ணைமூடிக்கொண்டு சொல்லித்திரியும் வரை இவ்வுண்மை புலப்படப்போவதில்லை.

கே. ஜே., கொல்ஸரி என்றும் அறிஞர் வன்முறைக் கலப்பற்றதண்டனைபற்றி அரசியல்அதிகாரம்என்னும் நூலில் கூறியுள்ளார். அதாவது அறவழியில் நின்றும் தண்டனையைக்கொடுக்கலாம் என்று கூறுகிருர். அது தகுந்த பயன் தராது என்பதும் அவரின் கருத்தாகும். எனவே அவருடைய அபிப்பிராயத்தில் ஓர் நிர்ப்பந்தம் என்ருல் வன்முறைப் பிரயோகம் என்றுதான் எண்ணுகின்ருர். ஆனுல் அறவழியிலும் நிர்ம் நிர்ப்பந்தத்தை கொடுக்கலாம் என்பதை கொல்ஸரி ஏற்றுக்கொள்கிருர்கள் என்பது தெளிவு. அறவழிப்போராட்டத்துறை வரலாற்றினை ஆராயும் கல்விமான்கள் அறவழி மூலம் பூரண விடயத்திற்கு மாற்றங்களை ஏற்படுத்திய பல சம்பவங்களையும் சான்றுகளாகக் கூறுவர்

யாருக்கெதிராக அறவழிப் போராட்டம் நடத்தப்பட்டதோ அவர்களிடம் அவர்களின் எண்ணங்களுக்கு எதிரான மாற்றங்களை 'ஏற்படுத்து அவர்களை அடிபணியவும் வைத்துள்ளது. வேறு சில சந்தர்ப்பங்களில் அவுர்கள் தமது நடத்தைதயை மாற்றிக் கொள்ளவும் அறவழி துணை புரிந்துள்ளது.

இவற்றில் இருந்து ஓர் அரசியல் அதிகாரத்தைப்பிறப்பிப்பதில் அறவழி வன்முறையைவிட வல்லமை பொருந்தியது என நாம் முடிவு கட்டிவிடமூடியாது. ஆயினும் அறவழிமூலம் பிறப்பிக்கப்படும் நிர்ப்பந்தம் அதிகாரம் என்பனவும் வன்முறையிஞல் பிறப்பிக்கப்படும் நிர்ப்பந்தம் அதிகாரம் என்பவையோ சக்திவாய்ந்தது, வலிமை பொருந்தியது என்பதைக் காணலாம். இவ்விதம் அறவழிப் பிரயோகத்தின்போது சக்திவாய்ந்த பயன்தரக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகள்பற்றியே தற்போதைய ஆய்வுகளின் கவனம செறிந்துள்ளது. இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்பதே அறவழிக்கல்விமான்களின் விருப்பமேயன்றி அறவழி ஒன்றே பயன்தரும் என்னும் குருட்டு விசுவாசமும் அழுங்குப்பிடியான கொள்கையும் அவர்களிடம் இல்லை.

மக்கள் அறவழிப்போராட்டங்களுடன் சமாதானக்கல்வியும் இணைந்துள்ளது என்று எதிர்பார்ப்பதுண்டு. ஆயினும் இந்தக்கட்டுரையில் குறிப்பிடப்படும் கல்விமான்கள் ஒரு சிலரைத்தவிர யாவரும் சமாதானக்கொள்கைகளில் கவனம் செலுத்துகின்றவர்கள் அல்ல. சமாதானக் கொள்கைகள்மிகவும் உன்னதமானவாழ்விற்கு வழிசெய்யுமா? இல்லையா? என்பதும் அவர்கள் கருத்தை ஈர்க்கும் விடயங்கள் அல்ல, சமாதானக் கொள்கைகளை பரந்தளவில் யாவரும் எளிதில் கைக்கொள்ளப்போவதில்லை என்பது ஜீன்ஷாப் எனும் அறிஞரின் கருத்தாகும். இதைப்பலரும் ஏற்றுக்கொள்வார். சமாதானக் கொள்கைகள்பற்றிஏதும் அறியாத பல சாதாரணமக்களும் கூட ஒருங்கிணைந்து ஸ்தாபன ரீதியான அறவழி நடவடிக்கையில்ஈடுபட்டிருப்பதும் தெளிவானதோர் 'உண்மையாகும். எனவேதான் அறவழித் துறைக் கல்விமான்கள் அறவழி அரசியல் நடவடிக்கைகளைப் பிரயோகிப்பதும்அதன் வளர்ச்சிக்கும் சமாதானத் துறையுடன்எந்தவித தொடர்பும் கிடையாது என்றும் வாதிக்கின்றனர், எனவே அறவழிப் போராட்டக்கல்வி என்பது தனித்துவமானதும் இணங்கக்கூடியதுமான கல்வித் துறையாக விளங்குகின்றது. என்று முடிவு செய்யலாம். அறவழியில்நின்று நேரடி நடவடிக்கையில் ஈடுபடுதலைப் பற்றி மிகுந்த கவனத்துடன் திட்டவட்டமாக ஆராய்வதிலேயே அறவழிப் போராட்டக் கல்வித்துறையினர் கண்ணும், கருத்துமாய் இருப்பர்.

பொதுவாக இது பல்வேறு நேரடி நடவடிக்கைகளைத்தன்னகத்தே கொண்டதாகும். தேர்தல்கள் இராஜதந்திர சாணக்கியங்கள், பேச்சுவார்த்தைகள், நடுநிலைத்துவ சொல்லில் இணங்கவைத்தல் என்னும் வழக்கமான அரசியல் நடவடிக்கைகளுக்கு இங்கே இடம் இல்லை 198 விதமான பல்வேறு நேரடி நடவடிக்கைகளை ஜீன்ஷாப் அவர்கள் இனங்கண்டுள்ளார். இவற்றை மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்துவதற்கு ஓர் பயன் என்று ஆய்வுத்திட்டம் தேவை என்ற ஜீன்ஷாப் அவர்களின் கருத்தை பலர் ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. இந்த நடவடிக்கைகள் செயல்பாட்டையும் அதற்கான செயற்பாட்டுக் களத்தையும் வேண்டி நிற்பனவாகும்.

அநேக சந்தர்ப்கங்களில் யாவருக்கும் தெளிவான அல்லது மறைமுகமானதோர் நிர்ப்பந்தம் வலியுறுத்தப்படுகின்றது. சிலவேளைகளில் அறவழிப் போராட்டத்திற்கு உகந்த வழியில் அழுத்தம் பிரயோகிக்கப்படுவது வலியுறுத்தப்படுகின்றது.

அரசியல் விஞ்ஞானத்துறை பொதுக்கல்வித்துறை என்பவற்றில் அறவழிப்போராட்டக்கல்வியின் ஆரம்ப அரிச்சுவடியில் கற்கவேண்டியது யாது? அரசியல் அதிகாரம், அதுபற்றிய எண்ணக்கருவின் வடிவம், 'அவற்றின் பிரயோகம் என்பவை தொடர்பாக நாம் சற்றுச் சிந்திக்கவேண்டும் என்பதே பிரதானமானது.

அறவழிப் 'போராட்டச் செயற்பாடுகளை அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தல் வேண்டும். இதிலிருந்து அனுமானங்களையும்,அனுபவங்களையும் ஆராய்ந்து விசாரித்து எந்தச்சூழ்நிலையில் எந்த நடவடிக்கை பொருத்தமானது பயன்தரக்டிடியது சக்திவாய்ந்தது என்று காணலாம். இவற்றை வைப்பதற்கு சாத்தியமானதோர் சந்தர்ப்பம் வகைப்படுத்துவதால் ஏற்படும்.

இயற்கையாகவே வன்முறை நடவடிக்கைதான் அவசியமானது என்று இன்று காணப்படும் சந்தர்ப்பங்களில்கூட பயன்தரக்கூடிய மாற்றுவழிகளை காணலாம் என்று இந்த வகைப்படுத்தல்கள் வழிசெய்யலாம்.

அறவழிப் போராட்ட ஆய்வின்போது ஆரம்பத்தில் வன்முறைச்செயல்களின் பிரயோகத்திஞல் ஏற்படும் விளைவுகளையும் திட்டவட்டமாக ஆராய்தல் கண்டிப்பானதோர் விடயமாகும்.

இந்த ஆய்வின் முடிவுகள் ஈற்றில்குப்பைத் தொட்டியைக் காணவேண்டிய மிகப்பிரதானமான கழிவுப்பொருளாகலாம்.

அறவழிப்போராட்டம்போல் தோன்றுகின்ற அதன் அடங்கலுடன் தொடர்பற்ற அறவழியினர் கருத்தும் கவலையும் கொள்வதாக கண்கொண்டே நோக்காத அதன் வெறும் நிழல்கள் ஊடாக அதனை மதிப்பீடுசெய்தலை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

அறவழிப் போராட்டத்தின் இலக்கு என்ன? அது வேண்டி நிற்பது யாது அதற்கு வேண்டத்தகாதது என்ன என்பதை கல்விமான்கள் மதிப்பீடு செய்யவேண்டும். ★

# சிறுவர் வளர்ச்சிக்கு

— சண் காளிதாஸ்

சிறுகுழந்தைகளின் மன வளர்ச்சி, ஆற்றல்வளர்ச்சியை ஊக்கப்படுத்தி உற்சாகமளிக்கும் பழக்கம் வெளிநாடுகளில் காணப்படுகின்றது.

சிறு குழந்தைகள் எல்லாம் அவர்களாகவே சிந்திக்கவும் செயல்படவும் அங்கு உருவாக்கப்படுகின்ருர்கள். சர்க்கஸ் காட்சி ஒன்றைச் சிறுவன் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பா, அம்மாவைக் கேட்டு அதைப்பற்றி எழுதக் கூடாது. அவர்களும் சொல்லிக் கொடுக்கக் கூடாது.

சிறுவன் தப்பு தப்பாக எழுதிஞலும் அவனே தான் யோசித்து எழுத வேண்டும். அவன் கல்வி பயிலும் பாடசாலையில் அவனுடைய ஆசிரியர் அந்தக்கட்டுரையில் இலக்கணம் பிழைகள் இருந்தாலும் திருப்திப்படுவார்.

கட்டுரையில் இலக்கணப்பிழைகள் திருத்தப்பட்டபின் சிறுவன் திரும்பவும் ஒருமுறை எழுதுவான். பிறகு அந்த மாதிரி தாமே சுயமாக எழுதிய கட்டுரைகளை பைன்ட் செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்து கொள்வதன் மூலம் சிறுவருக்குத்நாமே பெரிய சாதனை செய்து விட்ட பெருமிதம் ஏற்படும்.

சிறுகுழந்தைகளை சகல வழிகளிலும் வளர்ச்சி அடையச்செய்ய, அவர்களின் பெற்றேரும், பாடசாலை ஆசிரியர்களும் நன்கு திட்டமிட்டுச் செயல்படுகின்றனர்.

இதன் காரணமாக சிறுவர்கள் மத்தியில் இளம்வயதிலேயே தன்னம்பிக்கை, தன்செயலில் நம்பிக்கை, பணி செய்வதில் ஆர்வம். ஊக்கம் தென்படுகிறது.

நம் சமுதாயத்தில் இருக்கின்ற பெற்றேர், ஆசிரியர்களும் இவ்விதம் செயல்படுவார்களாயின் தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்கால நற்பிரஜைகளாகிய இன்றைய சிறுவர்கள், எம்சமுதாய வளர்ச்சிக்கு பயன் தருபவர்களாக வளர்வார்கள் இல்லையா?

# அறவழியின் அகதிச்சேவை

மே, ஜூன் மாதங்களில் வடமராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ அனர்த்தங்களின் பொருட்டு, அங்கிருந்து அகதிகளாக வெளியேறிய பல ஆயிரக்கணக்கான வடமராட்சி மக்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் தங்கியிருந்தனர்.

இவ்வாறு வெளியேறிய மொத்த ஜனத்தொகையில் சுமார் 70 வீதமான வடமராட்சி மக்கள், தென்மராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் சுமார் 40க்கு மேலான அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர்.

இவ் அகதி மக்களின் துயர்துடைக்கும் பணியில் அறவழிப் போராட்டக் குழுவும் கணிசமான பங்களிப்பினை வழங்கியது.

அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்திருந்தகுடும்பங்களில் இருக்கின்ற சிறுகுழந்தைகளுக்கான பால் மாவகைகள் முக்கியமாக வழங்கப்பட்டதுடன், முகாம்களில் தொற்று நோய்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருந்து, சவர்க்காரம் என்பவற்றினையும், தேங்காய் உடுப்புவகைகளையும் அகதிகள் மூாாம்களுக்கு குழுவினர் நேரில் விஜயம் செய்து வழங்கினர்.

இவைதவிர, வடமராட்சி அகதிகளுக்கு உணவு மற்றும் உதவிகள் கோரி அறவழிப் பணிமனைக்கு வருபவர்களுக்கும் உடனடி நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன,

அகதிகளுக்கு வழங்கவென மட்டுவில், சரசாலை, நுணுவில், மீசாலை, தனங்கிளப்பு, சாவகச்சேரி, மறவன்புலவு, வேலணை கிழக்கு, வேலணை மேற்கு போன்ற கிராமங்களில் தேங்காய், உடுபுடவைகள் என்பன அறவழி ஆசிரியைகளாலும், சென். விஜான்ஸ் முதலுதவித் தொண்டர்களாலுய் திரட்டப்பட்டு வழங்கப்பட்டன.

தென்மராட்சிப் பகுதியில் இருந்த அகதிகள் முகாம்களுக்கு, குழுஉறுப்பினரும் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் வைத்தியருமான டாக்டர் திருமதி விமலா தங்கவேல் விஜயம் செய்து நோய்வாய்ப்பட்டிருக்கும் அகதிகளைப் பரிசோதனை செய்து சிகிச்சை அளித்ததுடன், இலவச மருந்து வகைகளும் வழங்கப்பட்டன.

( 5ம் பக்கம் பார்க்க )

# பாலர் கல்வியில் அறவழியின் பணி பாரட்டத்தக்கது

"யாழ்ப்பாண மாவட்டத்திலே நடாத்தப்பட்டு வருகின்ற பாலர் பாடசாலைத் திட்டங்களில் அறவழிப் போராட்டக் குழுவினால் நடாத்தப்பட்டு வருகின்ற பாலர் பாடசாலைகள் நன்கு திட்டமிட்டு இயங்கி வருகின்றன. இப்பாடசாலைகளில் சேவை புரிகின்ற ஆசிரியைகளின் தன்னலமற்ற, திறமை மிக்க சேவையினை பல கல்விமான்களும், அறிஞர்களும் பாராட்டியுள்ளனர்''

இவ்வாறு கைதடி நவீல்ட் பாடசாலையின் துணை அதிபரும் குழுவின் கல்வி ஆலோசகருமான திரு. கே.கோபாலகிருஷ்ணன், அறவழிப் போராட்டக் குழுவினால் கடந்த மாதம் கைதடியில் நடாத்தப்பட்ட அறவழிப் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான மூன்று நாள் கருத்தரங்கினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது தெரிவித்தனர்.

அறவழிப் போராட்டக் குழுவின் தலைவரும், கல்விஇயக்குனருமாகியதிரு.வீ.எஸ்.துரைராஜா தலைமையில் இவ் ஆரம்பவிழா நடைபெற்றது.

திரு. வீ. எஸ். துரைராஜா தமது தலைமையுரையின் போது,

''தமிழ்சமுதாயத்தின் எதிர்கால நற்பிரஜைகளை நன்கு திட்டமிட்டு உருவாக்கும் பணியில் செயல்பட்டு வருகின்ற அறவழிப் போராட்டக்குழுவின் கல்விப்பணிகள் யாழ்ப்பாணம், கிளிநோச்சி மாவட்டங்களில் செயல்பட்டு வருவதாகவும், பாலர் பாடசாலை ஆசிரியைகள் தம் பணிகளை வெறும் கடமை எனக் கருதாது, தம் முன்னுள்ள மிகவும் பொறுப்பு மிக்க சேவை என்பதை இலட்சியமாகக் கொண்டு சேவையாற்ற வேண்டும்.'' எனக் குறிப்பிட்டார்,

இவ்விழாவில் இயக்குனர்கள் திரு. வீ. ஜீ. தங்கவேல், திரு. எஸ். சீ. எஸ். தங்கராசா ஆகியோரும் பயிற்சியின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றினர்.

குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் அவர்கள் நன்றியுரை வழங்கினர்.

## தர்மம் தலைகாக்கும்

(மட்டுவில் மகாவித்தியாலயத்தில் குழுவினால் நடத்தப்பட்ட அறவழிபயிற்சியில் பங்குபற்றிய காசிநாதர் இல்ல மாணவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை)

தர்மம் என்று கூறும் போது நாம் மற்றவர்களுக்கு கொடுப்பது தான் தர்மம் இல்லை. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் ஆகியவற்றைத் தவிர்த்து நடத்தலே தர்மமாகும். இன்று எமது நாட்டில் அதர்மம் தலை தூக்கி நடமாடுகின்ற காரணத்தினால் தான் இன்று எத்தனையோ தமிழ் உயிர்கள் அழிந்துள்ளன, அழிந்து கொண்டுள்ளன; அழியப் போகின்றன. இதனைத் தடுக்கு முகமாகவே இன்று உலகம் முழுவதும் தர்ம வாரம் கொண்டாடப்பட்டு வருகிறது. தர்ம வழியில்நின்று அகிம்சைப்போராட்டத்தை முன் எடுத்தவர்கள் மாட்டீன் லூதர் கிங், காந்தி ஆகியோர் ஆகும். இவர்களைப் போன்று ஒவ்வொரு மனிதனும் பின்பற்றுபவாளேயானால் நாட்டில் அதர்மத்தை ஒழித்து தர்மத்தைக் காக்கலாம்.

வள்ளுவர் கூட தமது திருக்குறளில் தர்மத்தைப் பற்றி பல இடங்களில் கூறியுள்ளார், அதனுள் ஒரு குறள் வருமாறு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

பூமியிலே தர்ம வழியிலே நின்று வாழ்கின்றவன் மேலுலகிலுள்ள தேவர்களுள் ஒருவனுக மதிக்கப்படுவான் என்பது குறளின் விளக்கமாகும்.

இஸ்லாமியத்தில் குரானிலும், கிறிஸ்தவத்தில் பைபிளிலும் தர்மத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

முதலிலே வெற்றி கிடைக்கவில்லை என்று அதனைக் கைவிடாமல் இறுதி வரை தர்ம வழியில் நின்று வெற்றி பெறலாம் என்பதற்கு மகா பாரதத்தில் வரும் பஞ்ச பாண்டவர்கள் எடுத்துக்காட்டாக விளங்குகின்றுர்கள்.

மாணவர்களாகிய நாம் அன்பாகவும், பிறர்க்குதவி செய்தும், பெரியோர்க்கு கீழ்ப் பணிவதும், போன்ற தர்ம சிந்தனைகளை கடைப்பிடித்து வாழ வேண்டும். இதுவே மாணவர்களாகிய நாம் கடைப்பிடிக்கக்கூடிய செயல்களாகும்.

பொறுமையாய்இரு பொருமைப்படாதே. புண்ணியம் செய் பாவம் செய்யாதே,உண்மை சொல் வதந்தியைப் பரப்பாதே, கிரகித்துக் கேளுங்கள் கடுமையாய்க்கதைக்காதீர்கள், அன்பாய் பேசுங்கள் ஆத்திரம் கொள்ளாதீர்கள் சிரித்து வாழுங்கள் பிறர் சிரிக்க வாழாதீர்கள்.

மேலே கூறியது போன்று நாம் ஒவ்வொரு செயலையும் அறவழியில் நின்று நாம் செய்வோமாயின் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலை நாட்டலாம். இதனுல் நாட்டில் உயிர்க் கொலைகள் பொருளாதார சீரழிவுகளைத் தவிர்த்து நாட்டை செழிப்புறச் செய்யலாம்.

அதர்மம் ஒழிக
தர்மம் வாழ்க

## கருத்தரங்கு

அறவழி சிறுவர் கழகங்களின் பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கும் அறவழிப் பயிற்சியும் ஆகஸ்ட் மாதம் 20ம் திகதி கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து வருகை தந்த 75 சிறுவர்கள் பங்கு கொண்டனர்.

அறவழி சிறுவர் கழகங்களுக்கான எதிர்கால வேலைத்திட்டங்கள் பற்றியும் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

## காந்தி தினம்

மகாத்மா காந்தியின் 118வது பிறந்த தினமாகிய அக்டோபர் 2ம் திகதியை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கான விரிவான ஏற்பாடுகளை அறவழி இயக்கம் மேற்கொண்டுவருகின்றது.

இத்தினத்தினை முன்னிட்டு, அறவழி சிறுவர் கழகங்களுக்கிடையிலான பேச்சுப்போட்டியைகிராமிய மட்டத்தில் நடாத்தவும், மரம் நாட்டும் பணியினை முன்னெடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## சமுதாய மாற்றத்தில் மகளிர் பங்கு

"சமுதாய மாற்றத்தில் மகளிர் பங்கு'' எனும் தலைப்பிலான மூன்று நாள் கருத்தரங்கு ஒன்றினை அக்டோபர் மாத நடுப்பகுதியில் நடாத்துவதற்கு அறவழிமகளிர் மறுமலர்ச்சிக் கழகம், ஏற்பாடு செய்து வருகின்றது.

இக்கருத்தரங்கில் பங்கு கொள்ள விரும்பும் மகளிர் தமது விண்ணப்பத்தை அக்டோபர் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அறவழி பணிமனைக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். கருத்தரங்கு காலத்தின் போது உணவு, இருப்பிட வசதிகள் வழங்கப்படும்.

## கிராமிய சந்திப்பு

அறவழி இயக்கம் சேவையாற்றி வருகின்ற கிராமங்களில் - கிராமிய சந்திப்பு நடாத்தி, மக்க குறை நிறைகளையும், கிராமியப் பிரச்சனைகளையும் அறிய அறவழி இயக்கம் முன்வந்துள்ளது.

இக் கிராமிய சந்திப்புகள் வலய ரீதியாக நடைபெறவுள்ளன.

## பாலர் விளையாட்டுப் போட்டிகள்

அறவழிப் பாலர் பாடசாலைகளுக்கான விளையாட்டுப்போட்டிகள்ஒவ்வொரு கிராமத்திலும் இம்மாதம் 15ம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

விளையாட்டுப் போட்டிகளை நல்ல வகையில் நடத்துவதற்கான முயற்சிகளில் பாலர் பாடசாலை ஆசிரியைகளும், பாலர் பாடசாலை அபிவிருத்திச் சபைகளும் ஈடுபட்டு வருகின்றனர்.

## சிறுவர்களுக்கான அறவழிப் பயிற்சி

அறவழி சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் ஒன்றினை டிசம்பர் மாத நடுப்பகுதியில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் பங்கு கொள்ள விரும்பும் அறவழி சிறுவர் கழகங்கள் ஐந்து சிறுவர் பிரதிநிதிகளின் பெயர் முகவரிகளை 15-11-1987க்கு முன் பணிமயில் கிடைக்கச் செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

இப்பயிற்சியில் காந்தீய வாழ்வுமுறை, சமுதாயப்பணிகள் பற்றிய விரிவுரைகளும் வழங்கப்படும்.

## அறவழியின்......

( 4ம் பக்கத்தொடர்ச்சி )

அறவழியின் அகதித் தொண்டுக்கு உதவும் பொருட்டு பலர் எமக்கு உதவிக்கரம் வழங்கியுள்ளனர். இவ் அன்பர்களுக்கு எமது இயக்கத்தின் விசுவாசமிக்க நன்றியறிதலை "அறவழி''மூலம் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேம்.

## அறவழி நூலகம்.

அறவழி நூலகத்திற்கு புதிய தமிழ் இந்திய நூல்கள் கிடைத்துள்ளன. இரவல் கொடுக்கும் பகுதியில் நூலக உறுப்பினர்கள் புத்தகங்களை இரவல் பெற்றுக்கொள்ளலாம்.

## அறவழி சந்தா

சமுதாய மாற்றப் பத்திரிகையான அறவழி ஒவ்வொரு மாதமும், தவருது உங்கள் வீடுகளுக்கு வந்து சேர - இன்றே சந்தா பணத்தைச் செலுத்திக்கொள்ளுங்கள்.

**உள்நாடு:**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி: | ரூபா | 2-00 |
| வருடம்; | ரூபா | 30-00 (தபாலில்) |

**வெளிநாடுகள்** (விமானத் தபாலில்)

| | | |
|---|---|---|
| இந்தியா | ரூபா | 105-00 |
| மத்தியகிழக்கு | ரூபா | 110-00 |
| ஐரோப்பா | ரூபா | 130-00 |
| அமெரிக்கா / கனடா | ரூபா | 150-00 |

தங்களின் சந்தாப்பணத்தைக் காசோலையாக அனுப்ப விரும்புவோர் அறவழி பத்திரிகை க/கு இல. 2365 என எழுதி அனுப்பவும். சந்தாத் தொகை கிடைத்ததும் உரிய பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

முகவரி: அறவழி
த. பெ. இல: 2
சாவகச்சேரி

அறவழி
NONVIOLENCE

# அணு ஆயுத உற்பத்தியை எதிர்த்து சைக்கிளில் உலக பிரசாரம்

பங்களாதேஷைச் சேர்ந்த இருஇளைஞர்கள் உலகில் அதிகரித்துவருகின்ற அணு ஆயுத உற்பத்தி போட்டியை எதிர்த்து உலக மக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொள்ளும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

சைக்கிளில் இதுவரை இந்தியா, பாகிஸ்தான். ஈரான், துருக்கி, கிரேக்கம், இத்தாலி சுவிற்சர்லாந்து, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளனர். இதுவரை சுமார் 18,000 கிலோ மீட்டர் தூரத்தினை இவ் இரு இளைஞர்களும் பிரயாணம் செய்து முடித்துள்ளனர்.

அணு ஆயுத உற்பத்தி—போட்டியினால் மனிதகுலம் எதிர்நோக்கக்கூடிய அபாயங்கள், பிரச்சனைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் எடுத்துக் கூறிவருகின்றனர் என அறிக்கைகள்மூலம் தெரிய வருகின்றது.

''அணுகுண்டில் இருந்து உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றுங்கள்''

''எமக்குள்ளது ஒரே உலகம், அதனைக் காப்பாற்றவேண்டியது எமது பொறுப்பு''

போன்ற சுலோகங்களை இவ் இளைஞர்கள் மக்கள்மத்தியில் பரப்பிவருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் தற்போது தங்கிப் பிரச்சாரம் செய்துவரும் இவர்களுக்கு, இந்நாடுகளில் இருக்கின்ற அறவழி மனித உரிமைகள், சமாதான இயக்கங்கள் நல்ல உற்சாகமளித்து வருவதுடன், இந்த இளைஞர்களின் முயற்சிக்கு தமது ஆதரவுகளையும் வழங்கிவருகின்றனர்.

ஐரோப்பியநாட்டுப் பிரசாரத்தினை அடுத்து, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, யப்பான் போன்றநாடுகளுக்கும் இவர்கள் செல்ல இருக்கின்றனர்.

இந்தஇளைஞர்களின் முயற்சியினை அறவழி பாராட்டுவதுடன், அவர்களது திட்டம் ஈடேற எமது பிரார்தனைகளையும் வழங்க விரும்புகின்றோம்.

**விமர்சனம்**

## "உதய தாரகை"

அறியாமை, அச்சம், பயம், நம்பிக்கையின்மை, துன்பங்களைக் கண்டு துவளும் மனோபாவம், ஆகிய மன இருள் சூழ்ந்த இன்றைய காலகட்டத்தில் நம்பிக்கை ஒளி தரும் நட்சத்திரமாக உதயதாரகை வெளிவருவது பொருத்தமானதும்-அவசியமானதும் கூட.

மனித வாழ்வின் வழிகாட்டிகளான சோதிடம், கைரேகை சாஸ்திரம் போன்று தற்காலத்தில் ''நியூமொரலஜி'' என்னும் விஞ்ஞான எண்சோதிடக் கலையும் பிரபல்யமடைந்துள்ளது.

அந்த வகையில் எண்களுக்கும் மனித வாழ்விற்கும் இடையிலுள்ள தொடர்பும், எண்களுக்கும் உலக நாடுகளிற்கிடையிலான தொடர்பும் மிகச் சிறப்பாக இந் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

எண்களின் இயல்பிற்கேற்ப நாடுகளில் அரசியல், பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, ஏற்பட்டு வந்துள்ளன என்பதனை ஆசிரியர் வரலாற்று ரீதியாக நிரூபிக்க முயல்கிறார்.

13 என்ற எண் அதிஷ்டமற்ற எண் என்ற நம்பிக்கை மேற்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து வந்துள்ளது என்பதையும் இயேசு தேவகுமாரனாக இருந்தும் 12 சீடர்களுடன் சேர்ந்து 13 ஆனமையாலேயே சிலுவையில் அறையப்பட்டார் என்ற கூற்றின் மூலம் 13 எண் எவ்வளவு தீயது என்பது மாத்திரமன்றி எண்களின் முக்கியத்துவம் வாழ்வை முற்றிலும் பாதிக்கிறது.

மனிதவாழ்க்கையை பயனுள்ளதாக மாற்றியமைப்பதில் ''எண்கள் துணை புரிகின்றன'' என்பதனை 'உதயதாரகை' உணர்த்துவது மாத்திரமன்றி வாழ்க்கையை நம்பிக்கையுடன் எதிர்நோக்கவும், தேவையற்ற மனக்குழப்பங்களில் இருந்து விடுபடுவதற்கும் வழிகாட்டுகிறது என்று கூறினால் மிகையாகாது.

அறிவொளி பரப்பும் நூல் வரிசையில் நிச்சயம் உதயதாரகைக்கும் ஓர் இடம் உண்டு என்பதனை எவரும் மறுக்க முடியாது.

— நீர்வை கணேஸ் —

வெளியீடு: கே. எஸ். ரீ. சபாஸ் சுவிற்சலாந்து.

## வெளிநாட்டு சிறைகளில் 997 தமிழர்!

போதைப் பொருள் கடத்தலிலும், பாவனையிலும் ஈடுபட்டு பிடிபட்டதன் காரணமாக 977 இளைஞர்கள் வெளிநாடுகளில் இருக்கின்ற சிறைகளில் தண்டனை அனுபவித்துவருகின்றனர்.

1981ம் ஆண்டுக்கும் 1987ஆகஸ்ட்மாத காலப் பகுதியில் கைதுசெய்யப் பட்டவர்களே இவர்களாவர்!

இவர்களைத் தவிர மேலும் 363 இலங்கையர்கள் வெளிநாடுகளில் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளனர்.

## நாடு திரும்பினர்

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தினால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேசப்பயிற்சி முகாம்களில் பங்குபற்றிய திரு. சண். காளிதாஸ் இம் மாதம் 4ம் திகதி நாடு திரும்பியுள்ளார்.

திரு. காளிதாஸ், கிராமிய கைத்தொழில், தேனீ வளர்ப்பு, கதர் ஆடை தயாரிப்பு, கூட்டுப் பண்ணை, விவசாய ஊக்குவிப்பு, கிராமிய சுகாதாரம், காந்திய வாழ்வுமுறை, குழந்தை பராமரிப்பு, ஊட்டச்சத்து தயாரித்தல் போன்ற திட்டங்கள் தொடர்பான பயிற்சிகளையும் பெற்று வந்துள்ளார்.

இவர் இந்தியாவில் பெற்றுக்கொண்ட பயிற்சிகள் தொடர்பான விரிவுரைகளையும், அனுபவங்களை, கிராமியத் தொண்டர்களுடன் பகிர்ந்து எதிர்காலத்தில் நடைமுறைபடுத்தவுள்ளார்.

அறவழி வாசகர்களே
அஷ்டலக்ஷ்மி நாட்காட்டி
உங்களின் இல்லங்களில் இருக்க உறுதிபடுத்துங்கள்
1988ஆம் ஆண்டு பாவனைக்கு வெளிவருகின்றது!

அஷ்டலக்ஷ்மி
பொது அறிவு நாட்காட்டி

ரூபா பத்து முற்பணம் செலுத்தி உங்களுக்காக ஒரு நாட்காட்டியை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.

பதிவு செய்பவர்களுக்கு ஸ்ரீ முருகன் பஜனைப் பாடல்கள் அன்பளிப்பாக வழங்கப்படும், நாட்காட்டி மாதிரி அமைப்புகள் இலவசமாக வழங்கப் படுகின்றன. படங்களின் அமைப்புகளும் கண்காட்சிக்கு வைக்கப்படுள்ளன.

இலங்கையிலேயே முதன்முதலாக வெளிவரும் பொது அறிவு நாட்காட்டி. நாளாந்தம் சோதிடம், சமயம், சரித்திரம், சுகாதாரம், விஞ்ஞானம் ஆகியவற்றில் அறிவைத்தரும் அற்புதத் தயாரிப்பு.

கொக்குவில் இரகுநாதையர் வாக்கியப் பஞ்சாங்க கணிதப்படி இராகுகாலம்எமகண்டம், நல்லநேரம் பார்க்கமுடியும்.

வெளியீட்டுவிழா கார்த்திகை மாதம் நல்லூரில் இடம் பெறும்.

நாட்காட்டியின் வருகையை அறிந்து ஆசிச்செய்திகள் அனுப்பி உதவிய நல்லை ஆதீன முதல்வர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிர முதல்வர், மில்க்வைற் அதிபர் ஆகியோருக்கு எமது நன்றி.

விபரங்களுக்கு:
சிவா பிறின்டேர்ஸ்,
த. பெ. இல. 1. கைதடி

## புனர் வாழ்வுப் பணி

சர்வதேச சமாதான சேவை இயக்கம் வடபுலத்தில் புனர்வாழ்வுப்பணிகளை மிக விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்தில் கண்ணிவெடிகளினால் பாதிக்கப்பட்ட 20 பேருக்கு ஜெய்பூர் செயற்கைக் கால்களையும் வழங்குவர் எனத் தெரிவித்துள்ளனர்.

**அறவழியின் அடுத்த சேவைத் திட்டம்**

**?**

**விபரம் அடுத்த இதழில்!**

## மக்கள் மத்தியில் சமாதானம் அன்பு நல்லெண்ணம் சகோதரத்துவம் வளர்க்கப்படல் வேண்டும்

நான்கு வருடகால கொடூர அனர்த்தங்கள், இழப்புக்கள், சேதங்கள் பிரிவுகளின் பின்னர் தமிழ் மண்ணில் மக்களின் வாழ்க்கை வழமைக்குத் திரும்பி வருகிறது.

கடந்த காலங்களில் மக்கள் மத்தியில் நிலவிய எதிர்ப்புக்கள், வெறுப்புக்கள், தப்பபிப்பிராயங்கள் முரண்பாடுகள் வேறுபாடுகள் யாவும் நீங்கிய நிலையில் மக்கள் தம் புத்தம் புதிய தென்பூட்டும், நம்பிக்கை ஒளிகாட்டுகின்ற வாழ்க்கையை முன்னேக்கித் தம் பாதங்களை வைத்துநடக்க வேண்டும்.

தமிழ் மண்ணில் மக்களின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாத இருத்தல் பெரிதும் விரும்பத்தக்கது. ஆதலால், மக்கள் மத்தியில், பல்வேறு காரணங்களால், ஏற்பட்ட, ஏற்படுத்தப்பட்ட பயங்கர உணர்வுகளுக்கு விடுதலை கொடுத்துக்கொள்ள வேண்டிய காலகட்டம் ஏற்பட்டு வருகின்றது.

எனவே, சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் பெரு நன்மை கருதி, மக்கள்மத்தியில், சமாதானம், அன்பு, நல்லெண்ணம், சகோதரத்துவம் வளர்க்கப்பட்டுப் பேணப்படல் வேண்டும் என நாம் ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

இப்பத்திரிகை அறவழிப் போராட்டக் குழுவினரால் யாழ், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987 செப்டெம்பரில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.